KAYALPATTINAM MUNICIPALITY
FORM 3
Minutes of the Meeting held on 19.09.2017

| Date of Council meeting | Deceison Number | Subject of the Agenda | Resolution |
|---|---|---|---|
| 19.09.17 | 1449 | **மன்றப்பொருள்:1**<br>இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மையை சிறப்பாக செயல்படுத்திட உரிய பணிகள் மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை (ம) நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,திருநெல்வேலி அலுவலகத்திற்கு அதற்கான அறிக்கை தயார் செய்யப்பட்ட வகைக்கும், பணிகள் குறித்த புகைப்படம் எடுத்த வகைக்கும், விளம்பர பேனர்கள் நிறுவிய வகைக்கும் உரிய செலவுத்தொகையினை கீழ்க்கண்டவாறு நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்கு. | அனுமதிக்கப்பட்டது |

| வ.எண் | பணியின் பெயர் | நிறுவனத்தின் பெயர் | தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1. | திடக்கழிவு மேலாண்மை விளம்பர பேனர்கள் | சாந்தா டிஜிட்டல் (ம) டிரேடர்ஸ் | 1250/– |
| 2. | திடக்கழிவு மேலாண்மை அறிக்கைகள் தயார் செய்யப்பட்டது | திரு.சி.பொன்வேல்ராஜ், சுகாதார ஆய்வாளர்(செலவிடப்பட்ட தொகை) | ரூ.2640/– |
| 3. | திடக்கழிவு மேலாண்மை | வீனஸ் ஸ்டுடியோ | 3200/– |

| | | | |
|---|---|---|---|
| | | பணிகளுக்கான புகைப்படம் எடுத்த வகைக்கு ; டிஜிட்டல் வீடியோ | |
| | 1450 | **மன்றப்பொருள்:2**<br>இந்நகராட்சியில் இந்திய சுதந்திரதினத்தன்று (15.08.2017) கொடி ஏற்றும் நிகழ்ச்சிக்காக சாமியானா பந்தல், சேர்,டேபிள் (ம) மைக்செட் போன்றவை சன் சவுண்ட் சர்வீஸ், காயல்பட்டணம் நிறுவனத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டது. அதற்கான பட்டியல் தொகை ரூ.3200/– மட்டும் மேற்படி சன் சவுண்ட் சர்வீஸ் நிறுவனத்திற்கு வழங்க அனுமதிக்கு. | அனுமதிக்கப்பட்டது |
| | 1451 | **மன்றப்பொருள்:3**<br>இந்நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதார வாகன எண்:TN69U 6922-க்கு ஓட்டுநர் அறிக்கைப்படி பழுதுகள் ஏற்பட்டுள்ளதை சரிசெய்ய TV சுந்தரம் ஐயங்கார் & சன்ஸ், தூத்துக்குடி நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கவும், அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.64000/– ஆகும்.மேற்படி செலவு தொகையினை வருவாய் மற்றும் மூலதனநிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதிக்கு. | அனுமதிக்கப்பட்டது |
| | 1452 | **மன்றப்பொருள்:4**<br>இந்நகராட்சியிலிருந்து கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ள உரிய விளம்பரங்கள் நாளிதழில் விளம்பரம் செய்த வகைக்கு பட்டியல் தொகை கீழ்க்கண்ட விபரப்படி வழங்க அனுமதிக்கு. | அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td></td><td></td><td>
<table>
<tr><th>வ.எண்</th><th>பணியின் பெயர்</th><th>நாளிதழ்</th><th>தொகை<br>(ரூ)</th></tr>
<tr><td>1.</td><td>திறந்தவெளி மலம் கழித்தல் விழிப்புணர்வு அறிவிப்பு விளம்பரம் செய்த வகைக்கு</td><td>தினத்தந்தி<br>மாலைமுரசு</td><td>4637/–<br>3465/–</td></tr>
<tr><td>2.</td><td>பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை இறுதி அறிவிப்பு விளம்பரம் செய்த வகைக்கு</td><td>தினபூமி</td><td>ரூ.7896/–</td></tr>
</table>
</td><td></td></tr>
<tr><td></td><td>1453</td><td>மன்றப்பொருள்:5<br><br>காயல்பட்டணம் நகராட்சி பகுதிகளில் 18 வார்டுகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை சிறப்பாக செய்திடும் பொருட்டு அதன் ஒரு பகுதியாக ஜூன்–5–ம் தேதி முதல் அனைத்து வீடுகளிலும், நகரின் முக்கிய பகுதிகளிலும் மட்கும் குப்பை, மட்காத குப்பை என பிரித்து வாங்கும் நடைமுறைக்கு குப்பைகளை முறையாக சேகரிக்க மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் ஆணையர் அவர்களின் நேரடி அறிவுரையின்படி தனியாக வாகனம் மூலம் குப்பைகள் சேகரிக்கும் பணி தொடங்கப்பட்டது. மேலும் தினசரி சேகரமாகும் குப்பைகள் 21MT ஆகும். மேற்படி குப்பைகளை மூன்று லாரிகளில் மூன்று நடை வீதம் 9MT , டம்பர் பிளேசர் வாகனம் மூலம் 9MT (ம) ஒரு ஆட்டோ மூலம் 1MT குப்பைகளும் சேகரிக்கப்பட்டு வந்தது. தற்போது மீதமுள்ள 2MT குப்பைகளை சேகரிக்க இந்நகராட்சியிலுள்ள குடிதண்ணீர் வண்டி டிராக்டர் இழுவை தண்ணீர் சப்ளை போக மீதி நேரங்களில் பயன்படுத்த ஒரு டிரைலர்(இழுவை) மட்டும் மேற்படி குப்பை சேகரிக்கும் பணிக்காக வாடகைக்கு எடுத்து குப்பைகள் சேகரிக்க பயன்படுத்துவதற்கு பொதுசுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன்அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டது.அதற்காக கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளி வரப்பெற்றது.</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><th>வ.எ<br>ண்</th><th>நிறுவனம்</th><th>மாதம் ஒன்றுக்கு வாடகை<br>(ரூ)</th></tr>
<tr><td>1).</td><td>மெரிட் எர்த் மூவர்ஸ்,ஆறுமுகநேரி</td><td>420/–</td></tr>
<tr><td>2).</td><td>ஆர்.ற்றி.கன்ஸ்ட்ரக்ஸன்,காயல்பட்டணம்</td><td>380/–</td></tr>
<tr><td>3).</td><td>மாதவன் கன்ஸ்ட்ரக்ஸன்,காயல்பட்டணம்</td><td>320/–</td></tr>
</table>
மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்:1 (ம) 2–ஐ விட வரிசை எண்:3 மாதவன் கன்ஸ்ட்ரக்ஸன்,காயல்பட்டணம் நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளது. எனவே குறைவான விலைப்புள்ளி வழங்கியுள்ள மாதவன் கன்ஸ்ட்ரக்ஸன் நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கி பொதுசுகாதார அவசர அவசியம் கருதி பணிகள் மேற்கொண்ட வகைக்கும், அதற்கான செலவு தொகையினை வருவாய் மற்றும் மூலதனநிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதிக்கு.
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>1454</td>
<td>மன்றப்பொருள்:6<br>காயல்பட்டணம் நகராட்சிப் பகுதியில் கீழ்க்கண்ட திடக்கழிவு மேலாண்மை பணியினை தனியார் ஒப்பந்தப்பணியாளர் மூலம் செய்திட கோரிய ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாநில அளவில் விளம்பரம் செய்த வகைக்கு GOLDEN ADVERTISING & PUBLICITY,Chennai நிறுவனத்திற்கு பட்டியல் தொகை ரூ.60556/– மட்டும் வருவாய் மற்றும் மூலதனநிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்கு.</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>1455</td>
<td>மன்றப்பொருள்:7<br>காயல்பட்டணம் நகராட்சிப்பகுதிகளில் தூய்மை இந்தியா திட்டத்தின்படி நகராட்சிப்பகுதிகளை தூய்மையாக வைத்திருக்க பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த முக்கிய இடங்களில் டிஜிட்டல் பதாகைகள் வைத்தல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.75000/-க்கு பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று 11.08.2017 அன்று</td>
<td>அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br>1) M/s வேல் டிஸிட்டல் இன்னோவேட்டிவ் அட்வர்ட்டைசிங், மதுரை - மதிப்பீடு ரேட்டை விட 6.67% கூடுதல்<br>2) M/s ஜெயம் டிஜிட்டல்,மதுரை - மதிப்பீடு ரேட்<br>மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பநதப்புள்ளி கொடுத்துள்ள M/s ஜெயம் டிஜிட்டல்,மதுரை என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை அங்கிகரிக்கவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நகராட்சி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்றதையும் அங்கிகரிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | |
| | 1456 | **மன்றப்பொருள்:8**<br>காயல்பட்டணம் நகராட்சியில் நடைபெற்று வரும் பல்வேறு திட்டப்பணிகளை போட்டோ எடுத்து அதனை டிசைன் செய்து பிரிண்ட் எடுத்து கொடுத்த வகைக்கு திரு.யு.ஐய்யப்பன்,வீனஸ் ஸ்டுடியோ,காயல்பட்டணம் என்பவருக்கு பட்டியல் தொகை ரூ.7500/-யை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| | 1457 | **மன்றப்பொருள்:9**<br>காயல்பட்டணம் நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப்பணிகளை அவ்வப்போது போட்டோ எடுத்து தொடர்புடைய துறைகளுக்கு வழங்கவேண்டியிருப்பதாலும் நகராட்சியின் மூலம் மேற்கொள்ளப்படும் பல்வேறு வகையான பணிகளையும் பல்வேறு நிலைகளில் போட்டோ எடுக்கவேண்டியிருப்பதாலும் நகராட்சிக்கு சொந்தமாக கேமிரா தேவைப்படுவதால் புதிய கேமிரா ஒன்று வாங்கவும் அதற்கு ஏற்படும் செலவினத்தொகை ரூ.15.000/-த்தினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | 1458 | **மன்றப்பொருள்:10**<br>காயல்பட்டணம் நகராட்சியில் நகராட்சி பொதுமக்களன் நலன் கருதியும் பணியின் அவசர அவசியம் கருதியும் நகராட்சி சட்டம் 1920 விதி எண். 15 ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கான செலவினங்களும் அதற்குரிய பதிவேடும் மன்றத்தின் பார்வைக்கு | பார்வையிட்டு அனுமதிக்கப்பட்டது |
| | 1459 | **மன்றப்பொருள்:11**<br>காயல்பட்டணம் நகராட்சியில் பொறியியல் பிரிவில் உள்ள பிரிண்டர் வாங்கப்பட்டு பல வருடங்கள் ஆகி விட்டபடியால் அடிக்கடி பழுது ஏற்பட்டுவிடுவதால் பொறியியல் பிரிவு பணிகள் அதிகம் பாதிக்கப்படுவதால் பொறியியல் பிரிவிற்கு தனியாக புதியதாக பிரிண்டர் ஒரு எண்ணம் வாங்கவும் அதற்குரிய உத்தேச செலவினம் ரூ.19800/-யை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஈடு செய்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| | 1460 | **மன்றப்பொருள்:12**<br>காயல்பட்டணம் நகராட்சியில் பொறியியல் பிரிவின் பிரிண்டர் டோனர் 5 எண்ணம் ரீபிள் செய்யப்பட்ட வகைக்கு ஏற்பட்ட செலவினத்தொகை ரூ. 3000/- த்தை ஆனந்தா கம்ப்யூட்டர்ஸ்,திருச்செந்தூர் என்ற நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |
| | | | |
| | | | |